## கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி - 628 503
### லட்சுமி அம்மாள் நினைவு பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கி போட்டி - 2019

**கோவில்பட்டி மே 21, 2019** (செவ்வாய்கிழமை) நடைபெற்ற பதினொன்றாவது லட்சுமி அம்மாள் நினைவு கோப்பை அகில இந்திய ஹாக்கி போட்டி குறித்த செய்திகள்.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

போட்டியின் 6வது நாளான இன்று காலை 6.30 மணிக்கு நடைபெற்ற 17வது லீக் ஆட்டத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணியுடன் சென்னை சாய் அணி மோதியது.

**இதில் 4:1 என்ற கோல் கணக்கில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வெற்றி பெற்றது.**

7-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் சாகிர் உசைன் ஒரு பீல்டு கோல் போட்டார்.

20-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் திம்மண்ணா ஒரு பீல்டு கோல் போட்டார்.

35-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் கில்டர் இஸ்ரட் ஒரு பீல்டு கோல் போட்டார்.

39-வது நிமிடத்தில் சென்னை சாய் அணி வீரர் முத்து பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

54-வது நிமிடத்தில் மும்பை ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி அணி வீரர் ஜோசுவா வெஸோகர் பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **ஜோசுவா வெஸோகர்,** ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி, மும்பை.

(Refer Photo - LASA2019_21052019_LEAGUE_17_Photo)

**18வது லீக் ஆட்டத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணியுடன் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி மாலை 4.30 மணியளவில் மோதியது.**

**இதில் 2:1 என்ற கோல் கணக்கில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி வெற்றி பெற்றது.**

10-வது நிமிடத்தில் சண்டிகர் சிஜஎஸ்எப் அணி வீரர் அபாஷ் சர்மா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

38-வது நிமிடத்தில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி வீரர் லிங்ஷ்டன் ஒரு பீல்டு கோல் போட்டார்.

51-வது நிமிடத்தில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி வீரர் திருமுருகன் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. அமித் ஷையினி மற்றும் திரு. கீர்த்தி முத்தப்பா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **காளிதாஸ்** (கோல்கீப்பர்), தமிழ்நாடு போலீஸ் அணி, சென்னை.

(Refer Photo - LASA2019_21052019_LEAGUE_18_Photo)

**19வது லீக் ஆட்டத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணியுடன் புனே பிஇஜி & சென்டர் கிர்கி அணி மாலை 6.15 மணியளவில் மோதியது.**

**இதில் 1:1 என்ற கோல் கணக்கில் புனே பிஇஜி & சென்டர் கிர்கி அணியும் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணியும் சமநிலைப் பெற்றது.**

20-வது நிமிடத்தில் புனே பிஇஜி & சென்டர் கிர்கி அணி வீரர் பிரதாப் ஷிண்டே பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

57-வது நிமிடத்தில் செகந்திரபாத் சவுத் சென்ட்ரல் ரயில்வே அணி வீரர் சந்தீப்குமார் சிங் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. ஷாகில் அகமது மற்றும் திரு. சுரேஷ்குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **பஷாந்த் டிர்கே,** பிஇஜி & சென்டர் கிர்கி அணி, புனே

(Refer Photo - LASA2019_21052019_LEAGUE_19_Photo)

**மேலும் 20வது லீக் ஆட்டத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணியுடன் பெங்களூர் கனரா வங்கி அணி இரவு 8.00 மணியளவில் மோதியது.**

**இதில் 3:1 என்ற கோல் கணக்கில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வெற்றிப் பெற்றது.**

19-வது நிமிடத்தில் பெங்களூர் கனரா வங்கி அணி வீரர் பிரதாப் நிக்கின் திம்மய்யம் ஒரு பீல்டு கோல் போட்டார்.

30-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் சுனில் டோப்போ ஒரு பீல்டு கோல் போட்டார்.

47-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் மங்கரா பெங்கரா பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

56-வது நிமிடத்தில் புவனேஷ்வர் ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே அணி வீரர் சுரேஷ் டோப்போ ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. மல்ஹைட் சிங் மற்றும் திரு. ராஜ்குமார் ஜா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர்: **பினிட் எக்கா,** ஈஸ்ட் கோஸ்ட் இரயில்வே, புவனேஷ்வர்.

(Refer Photo - LASA2019_21052019_LEAGUE_20_Photo)

**நாளை 22.05.2019 (புதன்கிழமை) நடைபெறும் போட்டிகள்:**

| வ.எண். | நேரம் | அணி - 1 | அணி - 2 |
|---|---|---|---|
| 1 | 6.30 am | நேஷனல் ஹாக்கி அகாடமி, நியூடெல்லி | தெற்கு இரயில்வே, சென்னை |
| 2 | 4.30 pm | பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன், பெங்களூர் | இந்தியன் வங்கி, சென்னை |
| 3 | 6.15 pm | ஐசிஎப், சென்னை | பிஇஜி & சென்டர் கிர்கி, புனே |
| 4 | 8.00 pm | சவுத் சென்ட்ரல் ரயில்வே, செகந்திரபாத் | ஹாக்கி கூர்க், கர்நாடகா |